மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Religious Thoughts in Silappathikaaram

S. Nalini

Ph.D Researcher (Full Time), Department of Tamil, Field of Languages, Vels Institute of Science, Technology and Advanced studies, Chennai, India

Manuscript ID : **MT127A0066**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 20.09.2022
Revised: 22.09.2022
Accepted: 24.09.2022
Published: 30.09.2022

Pages : 124-134

DOI: 10.5281/zenodo.7371956

ABSTRACT:

In this modern technical world human are like machines. They don't have courtesy, love with everyone and have aberrant behavior. This behaviours will change only the religious spirits. Many types of literatures brought up of the religious thoughts. The first epic of silappathikaaram is in imperumkaappiyam. Elangovadikal registered that, the religions flourished in india, which also flourished in south india. He explains commonness of religious thoughts characters, the religions of shaivas, vainavas, buddist, jains, gowmaaras, headgood of clan (kuladeivam) are the rituals humbly taught the people good path.

KEYWORDS:

Silappathikaaram, Religions, Epic, Religious Thoughts, Development, Good Path

சிலப்பதிகாரத்தில் சமயச் சிந்தனைகள்

சூ. நளினி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்),
தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் இயந்திரத் தன்மையாய் மனிதன் இயங்கும் சூழலில் இரக்கமின்றி, அன்பின்றி, நெறிபிறழ்ந்து வாழும் காலகட்டத்தில் சமயங்கள் மீதான பற்றே அவனை மாற்றும் வல்லமை பெற்றவை. இச்சமயச் சிந்தனைகள் பல்வகைப்பட்ட இலக்கிய வடிவங்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஐம்பெருங்காப்பிய முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில், இந்தியாவில் சிறந்து விளங்கிய சமயங்கள் தென்னாட்டிலும் விளங்கின என்பதை இளங்கோவடிகள் பதிவு செய்திருக்கிறார். சைவ, சமண, வைணவ, பௌத்த, கௌமார, சிறுதெய்வ, குலதெய்வ, பத்தினித் தெய்வ வழிபாட்டு முறைகளும் இணக்கமுறத் திகழ்ந்து மக்களுக்கு நல்வழிப் புகட்டியுள்ளன என்பதை இளங்கோவடிகள் கதைமாந்தர்கள்வழி விவரித்து சமயப் பொதுவுடைமையாளராகியுள்ளார்.

கருச்சொற்கள்

சிலப்பதிகாரம், சமயங்கள், காப்பியம், சமயச் சிந்தனைகள், வளர்ச்சி, நல்வழி

முன்னுரை

உலகப்படைப்பில் இறைவனை முன்வைத்தே ஒவ்வொரு ஆக்கங்களும் உருப்பெறுகின்றன என்ற உண்மை ஐம்பெருங் காப்பியங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இக்காப்பியத்தைத் தொடர்நிலைச் செய்யுள் என்றுங் கூறுவர். காப்பியம் எனும் சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் மயிலைநாதர். அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நாற்பொருள் சார்ந்து காப்பியங்கள் வார்க்கப்பட்டிருப்பினும், அவை சமயங்களை மையமாகக் கொண்டே வளர்ந்திருக்கின்றன என்பதே உண்மை. ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையானதாகச் சொல்லப்படும் சிலப்பதிகாரத்தில் காணலாகும் சமயச் சிந்தனைகளை இக்கட்டுரையில் காண்போம்.

சிலப்பதிகாரம் - அறிமுகம்

சேர மன்னன் இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட தொடர்நிலைச் செய்யுளே சிலப்பதிகாரம். கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது மூன்று காண்டங்களாகவும், முப்பது காதைகளாகவும் பகுக்கப்பட்டுள்ளது. இது மூவேந்தர்களையும், மூன்று நாடுகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியாக இளங்கோவைகள் படைத்திருக்கிறார். அவர் சமணர் ஆயினும் சமயப் பொதுமையைப் பேசும் காப்பியமாகச் சிலப்பதிகாரத்தைப் படைத்திருப்பதே அவரது சமயப் பொறைக்கு அரண் சேர்க்கிறது.

சமயம் - விளக்கம்

பண்பட்ட உயர்வைக் காட்டுவதே சமயம். மனிதன் தன் வாழ்வில் தலைசிறந்து விளங்குவது, மனித சக்தியை தெய்வ சக்தியாக மாற்றுவது எனப் பல கருத்துகளை உடையது சமயம். சமையம் என்பதே சமயம் ஆயிற்று. “சமை” எனும் சொல்லில் இருந்தே சமயம் தோன்றிற்று என்பர். உள்ளத்தைப் பண்படுத்தி, சூழலுக்கேற்றார் போன்று மனதை மாற்றியமைத்துக் கொள்ளும் பக்குவப்பட்ட நிலையே சமயமாகும். “சமைக்கப்பட்டதுதான் சமயம். மனிதன் தன் வாழ்வு வளம்பெறவும், மக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெறவும், வழியாகச் செய்யப்பட்டது (அ) சமைக்கப் பட்டதுதான் சமயமாகும்” என்று அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் கூறுகிறார்.

இயற்கையை வழிபட்ட மனிதர்கள், நடுகல் வழிபாட்டிற்கு உருவம் கொடுத்து சமய வழிபாட்டில் ஈடுபட்டனர். கடவுளை மதித்தல், கடவுள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துதல். இராமலிங்கர்,

“பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப்
பொங்கி போங்கும் கங்குகரைக்
காணாத கடலே...” **(திருவருட்பா பாடல் எண் 2118)**

எனும் பாடல்வழி பொங்கிப் பெருக்கெடுத்து வருகின்ற நதிகள் (சமயங்கள்) நிறைவில் கங்கு கரை காணாத கடலை (கடவுளை)ச் சென்றடைகின்றன என சமயங்களை கடவுளாகப் பின்பற்றியே செல்கின்றன என்கிறார். இத்தகைய கருத்துகளை மையப்படுத்தித்தான் சிலப்பதிகாரச் சமயப் பதிவுகளும் இடம்பெறுகின்றன.

சிலப்பதிகாரத்தில் சமயச் சிந்தனைகள்

ஐம்பெருங்காப்பியங்கள் அனைத்தும் ஏதேனும் ஒரு சமயத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு விளங்கியமை புலனாகிறது. சமணரான இளங்கோவடிகள் காலத்தில் அனைத்து சமயச் சிந்தனைகளும் மேலோங்கி இருந்தன என்பதை தன்னுடைய சிலப்பதிகாரக் கதைமாந்தர்கள்வழி வெளிப்படுத்தி இருக்கிறார். சிலப்பதிகாரத்தில் சைவ, வைணவ, சமண, பௌத்த, சாக்கத, கௌமார கருத்துகள் மேலோங்கியுள்ளன.

கடவுள் வாழ்த்து

ஆசிரியர் நூலை இயற்றும்போது நூலின் வனப்பு இனிதாக அமைய கடவுளை வாழ்த்தித் தொடங்குவது மரபாகும். இளங்கோவடிகளும் அம்மரபைப் பின்பற்றியே சிலப்பதிகாரச் செய்யுள் இனிதாக நிறைவேற திங்களையும், ஞாயிற்றையும், மழையையும், பூம்புகார் நகரையும் போற்றி வணங்கியமையை,

“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்...
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்...
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்... **(சிலம்பு-மங்கல வாழ்த்துக்காதை)**

எனும் வரிகள் உணர்த்துகின்றன.

சைவ சமயச் சிந்தனைகள்

சிவன் - தமிழகத்தில் தொன்று தொட்டு வழக்கத்திலுள்ள சமயங்களில் சைவ சமயமும் ஒன்றாகும். “தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி...” எனும் மந்திரம் சிவத்தலங்களில் ஒலித்துக்கொண்டிருக்கும். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கொற்றவையை அறிமுகப்படுத்துமிடத்தில் சிவனின் அடையாளங்களான பாம்பைச் சுற்றுதல், பிறையைத் தலையில் அணிதல், நெற்றிக்கண், நஞ்சுண்டல், புலித்தோல் முதலிய அலங்காரத்துடன் கொற்றவை காட்சிப்படுத்தப்படுகிறாள். சிவனுக்கும் கோயில் இருந்ததை “பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்” எனும் வரி கூறுகிறது. சேரன் செங்குட்டுவன் சிவனின் அருளால் பிறந்தவன் என்பதை,

“செஞ்சடை வானவன் அருளினால் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ” **(சிலம்பு-26:98-99)**

எனும் வரிகள் உணர்த்துகின்றன. செங்குட்டுவன் சிவனையும் விஷ்ணுவையும் வணங்கிய குறிப்பும் சிலம்பில் இடம்பெறுகிறது.

முருகன் - தமிழ்க் கடவுளான முருகப் பெருமானின் பெருமையையும் இளங்கோவடிகள் கூறாமலில்லை. முருகன் வழிபாட்டை கௌமார வழிபாடு என்கின்றனர். சிலம்பில் முருகனைக் குரவையாடியும், வெறியாடியும் வழிபட்டுள்ளனர் என்ற செய்தி குன்றக் குரவையில் இடம் பெற்றுள்ளது. முருகனை "ஆலமர்ச் செல்வன்" (சிலம்பு-26:12); "கயிலை நன்மலை இறைவன்" மலைமகன் (சிலம்பு:26:16) ஆறுமுகன்; வேலன் என அழைத்துள்ளதை அறிய முடிகிறது. சிலம்பில் மூன்று காதைகளில் முருகனுக்குக் கோயில் இருந்ததாகச் செய்தி இடம்பெறுகிறது. முருகனின் அறுபடை வீடுகளுள் திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருவேரகம் என்கிற சுவாமிமலை ஆகிய மூன்று படைவீடுகளையும் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

சமண சமயச் சிந்தனைகள்

'ஜைனம்' என்பதைத் தமிழில் சமணம் என்கின்றனர். சமண சமயம் பழமையையும், சில தனித்தன்மைகளையும் கொண்டது. கி.பி.ஆறாம் நூற்றாண்டில் வர்த்தமான மகாவீரரால் செப்பம் செய்யப்பட்டது. அவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று. மகாவீரர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரர். முன்னோர் சொன்னதையும், தம்முடையவற்றையும் இணைத்து ஒழுங்குபடுத்திச் சமணம் என்ற சமயத்தைத் தோற்றுவித்தார். சமண சமயம் எந்தக் கடவுளைப் பற்றியும் கூறாத "நாத்திக சமயம்" என்பர். ஆனால் "சமண சமயக் கடவுள் அருகதேவன்" என்கிறது சிலப்பதிகாரம். கவுந்தியடிகள் எனும் பெண்துறவி மூலம் சமண சமயக் கருத்துகளை முன்மொழிகிறார் இளங்கோவடிகள். சமண சமயத்தின் முதல் தீத்தங்கரரான ரிஷபதேவர் (இவர் ஆதிபகவன் என்பர்) காலத்தில் இந்திர விழா ஏற்பட்டதென்று சமணர்கள் கருதுவர். இது சிலம்பில் இளங்கோவடிகள் குறிப்பிடும் இந்திரவிழா பற்றிய செய்தியாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

கவுந்தியடிகள் கூறும் சமணச் செய்திகள்

கண்ணகி, கோவலனை மதுரைக்கு அழைத்து வருபவர் கவுந்தியடிகள். புகார் நகரில் இருந்த சமண இருக்கைகளான அருகத்தானம், பெருமன்றம், சிலாவட்டம் பற்றிய செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

அருகத்தானம் - இது சமண சமய வழிபாட்டிடம். இது புலால் உண்ணாமை, பொய்கூறாமை முதலிய விரதம் மேற்கொண்டு, துன்பம் நீங்குவதற்கான வழிகளைக் கூறுமிடம். இது ஸ்ரீகோயில் என்று அக்காலத்தில் வழங்கப்பெற்றது.

பெருமன்றம் - அருகர், சித்தர், உபாத்தியார், ஆசிரியர், சாதுக்கள் ஆகிய ஐவகைச் சான்றோர்களும் கூடிநின்று சமண சமயக் கருத்துகளைப் பரப்பியும், விவாதித்தும் உறையுமிடம்.

சிலாவட்டம் - அசோக மரத்தின் நிழலில் இருந்த அருகப் பெருமானின் உருவத்திக்கு அபிஷேகம் செய்து, தேர்த்திருவிழா நடைபெறும் நாளில் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்ததும் வருகை தரும் சாரணர்கள் தங்குவதற்கும், அறக்கருத்துகளை உணர்த்துவதற்கும் அமைக்கப்பெற்ற மேடையே சிலாவட்டம் ஆகும். இந்தச் சிலாவட்டம் பற்றி பத்துப்பாட்டிலும் குறிக்கப்பட்டுள்ளது.

திருவரங்கத்தில் சமண சமயக் கருத்துகளை சாரணர் கூறியதை கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் மூவரும் கேட்டுள்ளனர்.

“அறிவன் அறவோன் அறிவுவரம்பு இகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்” (சிலம்பு-நாடுகாண் காதை)

எனும் வரிகள் சாரணர் மூலம் சமண சமயக் கருத்தாக வெளிப்படுகின்றன. சமண சமயத்தின் உயிர்க் கொள்கையே “வினைக் கோட்பாடு” இதனையே “ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுவம்” என இரண்டாவது உண்மையாக வைத்துள்ளார் இளங்கோவடிகள். அடுத்ததாக காமநீக்கத்தையும்,

“காமஞ் சார்பாகக் காதலின் உழந்தாங்கு
ஏமஞ் சாரா இடும்பை எய்தினர்
இல்லை அல்லால் இறந்தோர் பலரால்” (சிலம்பு-ஊர்காண் காதை)

என்பதன் மூலம் இல்லறத்தாரும் காமநீக்கத்தின் பொருட்டே இல்லறம் நீங்கி நிறைவில், துறவறம் சார்ந்து இறைநிலை பெற்றனர் என்பதை அறியமுடிகிறது.

வைணவச் சமயச் சிந்தனைகள்

திருமாலின் பெருமையைப் பேசும் வைணவக் கொள்கையையும் பேசாமல் விட்டுவிடவில்லை. மாங்காட்டு மறையோன்; கண்ணகி, கோவலன், கவுந்தி மூவரும் மதுரை நோக்கிச் செல்லும்பொழுது அவர்களுக்கு வழிகூறும் பொருட்டு திருமாலின் பெருமையைப் பேசுகிறான். மதுரைக்குப் போகும் வழிப்பயணத்தில் புண்ணிய சரவணம், பவகாரணியம், இட்டசித்தி ஆகிய மூன்று தடாகத்தின் சிறப்பும் கூறப்படுகிறது.

ஆய்ச்சியர்க் குரவையில் திருமால் பற்றிய சிறப்புகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. திருமால் உலகளந்த வரலாறு, பிறப்பு வரலாறு, கம்சனை வென்ற நிலை, அர்ச்சுனனுக்கு உதவ கதிர் மறைத்த வரலாறு, பஞ்ச பாண்டவர்க்குத் தூது சென்ற வரலாறுகள் சுட்டப்படுகின்றன. திருமாலுக்குக் கோயில்கள் இருந்த செய்தியை, "நீலமேனி நெடியோன் கோட்டம்" (சிலம்பு-5:172), "மணிவண்ணன் கோட்டம்" (சிலம்பு-10:10), "உவணச் சேவல் உயர்ந்தோன் நியமம்" (சிலம்பு-14:8), எனும் வரிகள் மூலம் இளங்கோவடிகள் வைணவக் கடவுளான திருமாலின் பெருமையைக் கூறுகிறார்.

நாட்டார் சமயச் சிந்தனைகள்

நாட்டுப்புறத்து மக்கள் தெய்வமேறி ஆடுவதும், அவ்வாறு ஆடும்போது அடுத்தவர்களுக்குக் குறி கூறுவதும் வழக்கம். இக்காலத்திலும் திருவிழாக்களில் மெய்சிலிர்க்க சிறுவர்கள், பெண்கள், ஆடவர்சிலர் தெய்வமேற்று ஆடுவதைக் காண முடிகிறது. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் சாலினி என்ற பெண்மேல் தெய்வம் வந்து ஆடுவதாகவும், அவள் உடலில் ரோமம் சிலிர்க்க, தலைமேல் கை கூப்பியாடுவதாக,

> **"……… முழங்குவாய்ச் சாலினி**
> **தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்**
> **கை எடுத்து ஒச்சிக் கானவர் வியப்ப**
> **இடமுன் வேலி எயினர் கூட்டுண்ணும்**
> **நடுஊர் மன்றத்து அடிபெயர்த்து ஆடி"** **(சிலம்பு-வேட்டுவ வரி)**

இவ்வரிகள் சுட்டுகின்றன.

மாதவிக்கூத்து

ஆடலரசியாக அறிமுகமாகி அனைவரின் கண்களையும் தன் நடனத்தால் கவர்ந்தவள் மாதவி. தனது ஐந்து வயதில் நடனப் பயிற்சியைத் தொடங்கி பன்னிரண்டாவது வயதில் நாட்டிய அரங்கேற்றம் மேற்கொள்கிறாள். அப்பொழுது தெய்வங்களை முதன்மையாகக் கொண்டு பதினோறு வகையான கூத்துகளை ஆடிக்காண்பித்து, "தலைக்கோலி பட்டம்" பெற்று சிறக்கிறாள் என்பதை இளங்கோவடிகள் அரங்கேற்று காதையில் கூறுகிறார்.

கொடிகட்டி - திரிபுரம் எரித்தவுடன் பார்வதியோடு சுடுகாட்டில் சிவன் ஆடிய ஆட்டம்.

அல்லியத் தொகுதி - கண்ணன் கம்சனைக் குத்தி வீழ்த்திய பொழுது ஆடியது.

மல்லின் ஆடல் - கண்ணன் தன்னை எதிர்த்த வானாசுரனை வீழ்த்தியது

குடிக்கூத்து - கடலில் சூரபத்மனை எதிர்த்து முருகன் போர் தொடுத்தது.

குடைக்கூத்து - அவுணரோடு போர் செய்த முருகன், அவர்களை வெற்றிகொண்டு குடைபிடித்து ஆடியது.

குடக் கூத்து - வாமணன் பேரூர்த் தெருக்களில் நீள்நிலம் அளந்த திருமால் ஆடிய கூத்து.

பேடிக் கூத்து - ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்தில் மன்மதன் ஆடியது.

மரக்கால் ஆடல் - அசுரர்கள் தாம் தாங்கிய போர்க் கோலத்தைத் தவிர்த்து ஓட, துர்க்கை வெற்றி கொண்ட செய்தி.

பாவைக்கூத்து - அவுணரை எதிர்த்துத் திருமகள் வெற்றிகொண்ட செய்தியைப் பாடுவது.

கடையம் - வாணன் ஊரில் வடக்கு வாயிலில் இந்திராணி (அயிராணி)யை வெற்றிகொண்டு ஆடியது.

பாண்டரங்கம் - கலைமகள், பிரம்மன் காணும்பொருட்டு தேர்முன் வந்து ஆடியது முதலிய நடன அபிநயங்கள் மூலம் சமயப் பொதுமையை இளங்கோவடிகள் வெளிப்படுத்துகிறார்.

மதுராபதி தெய்வம்

கணவனை இழந்த கண்ணகி பாண்டிய மன்னன் மீது கடுங்கோபம்கொண்டு, மதுரையை அழிக்கச் செல்லும்பொழுது அந்நகரிலிருக்கும் “மதுராபதி” தெய்வம் அவளைத் தடுத்து நிறுத்தி, கோவலனின் பண்டையப் பிறப்பு வரலாற்றைக் கூறி, அப்பிறவியில் நேர்ந்த சாபத்தால் இத்தீமை ஏற்பட்டதாக,

> **“மதுரா பதிஎனு மாபெருந் தெய்வம்**
> **இதுநீர் முன்செய் வினையின் பயனாற்...” (சிலம்பு-கட்டுரைக்காதை)**

வரிகள் மூலம் சொல்லுகிறது.

கொற்றவைக் கோயில்

மதுரை நகர மேற்கு வாயிலில் கொற்றவைக்குக் கோயில் இருந்ததையும், கோவலனை இழந்தபின், கண்ணகி மதுரையை விட்டு நீங்கும்பொழுது கொற்றவைக்கோயிலில் தன் வளையல்களை உடைத்தாள் என்ற செய்தி,

"கீழ்த்திசை வாயிற் கணவனோடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியோன் பெயர்க்கென
இரவும் பகலும் மயங்கினன் கையிற்..." (சிலம்பு-கட்டுரைக்காதை)

வழிபாட்டு முறைகளும் எனும் வரிகளின் மூலம் புலப்படுகிறது. கணவனை இழந்த கைம்பெண், தன் பூவும் பொட்டும் இழந்து, வளையல்களை உடைக்கும் வழக்கம் அக்காலந்தொட்டே இருந்து வருகின்றது எனும் செய்தியை அறியமுடிகிறது.

ஐந்திணைத் தெய்வங்கள்

ஐவகை நிலத்திற்கும் உரிய தெய்வங்கள் பட்டியலிட்டு, அத்தெய்வங்களுக்கான வழிபாட்டு முறைகள் பண்டைய காலந்தொட்டே இருந்து வந்ததை சங்க இலக்கியங்கள் முதற்கொண்டே தெளிய முடிகிறது. தொல்காப்பியர் தமிழக நிலஅமைப்பு முறைப்படி நானிலம் என்றே பகுக்கிறார். அப்பகுப்பையே இளங்கோவடிகள் கூறி, நானிலத் தெய்வ வழிபாட்டைத் தெளிவுபடுத்துகிறார்.

பத்தினித் தெய்வ வழிபாடு

கற்புடைய மகளிரைப் பெருமையுடன் பாராட்டுவது பண்டைய மரபாகும். கற்புடைப் பெண்டிரைப் 'பத்தினி' எனக் குறிப்பிடும் வழக்கம் இன்றுவரை இருந்து வருகிறது. சிலம்பிலும், காப்பியத் தொடக்கத்திலேயே கண்ணகி தெய்வமாகப் போற்றத்தக்கவள் என்பதை இளங்கோவடிகள்,

"தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்....

"மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகியென் பான்மன்னே"..

(சிலம்பு - மங்கல வாழ்த்துக்காதை) என்கிறார். மேலும் கண்ணகியானவள் "கற்புக்கடம் பூண்ட தெய்வம்" எனக் கவுந்தியடிகளும், "வம்பப் பெருந்தெய்வம்" என மதுரை மக்களும், கொற்றவை, காளி என வாயிற்காவலனும், தெய்வமுற்ற சாலினியானவள், "இவளோ கொங்கைச் செல்வி, குடமலையாட்டி, தென்தமிழ்ப் பாவை, செய்தவக்கொழுந்து, ஒருமாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி" என்றும் மாதிரியும் ஐயையும் "நப்பினைப் போல்வள்" என்றும், மலைவாழ் மக்கள் "இவள்போலும் நம்குலத்தோர் இருந்தெய்வம் இல்லை" என்றும் பெருமைப்படுத்தபட்டமை விளங்குகிறது. இவ்வாறாக மக்களால் பெருமையாகப் பேசப்பட்ட சிறப்பிற்குரிய கண்ணகிக்குக் கோயில் எழுப்ப வேண்டும் எனச் சேரன்மாதேவி கூறியதைத் தொடர்ந்து, சேரன்செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பியதை

"மாதரோ பெருந்திரு வுறுக வானகத்
தத்திற நிற்கநம் மகனா டடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென
மாலை வெண்குடை மன்னவன் விரும்பி.." (சிலம்பு-காட்சிக்காதை)

இவ்வரிகள் உணர்த்துகின்றன.

சிறுதெய்வ வழிபாட்டுச் சிந்தனைகள்

மானிடராய்ப் பிறந்து சிறப்பாக வாழ்ந்து, தெய்வ நிலையை அடைந்து, மேலானதொரு சக்தி பெற்றவர்களே சிறுதெய்வங்களாவர். அவ்வாறான சிறுதெய்வங்கள் மற்றும் அத்தெய்வங்களின் பண்புகள் பற்றியும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பேசியுள்ளார். வித்தியாதரன், பாசண்டசாத்தன், பூங்கண் இயக்கி (தென் மாவட்டங்களில் வணங்கப்பெறும் இசக்கியம்மன் போன்று), அழற்கடவுள், வனசாரினி, வரோத்தமை, பூங்கொடி முதலான தெய்வங்களை, சிறுதெய்வங்களாக சிலம்பில் இளங்கோவடிகள் படைத்திருக்கிறார்.

குலதெய்வ வழிபாட்டுச் சிந்தனைகள்

சிறுதெய்வங்களாக வணங்கப்பெற்று வீரஞ்செறிந்த சான்றோர்கள் வழிபாடே பிற்காலத்தில் குலதெய்வ வழிபாடாக மாறியது எனலாம். நாம் எந்தத் தெய்வத்தை வணங்க முற்பட்டாலும் அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குவது நம் குலதெய்வங்களே என்பர். இத்தகு குலதெய்வ வழிபாட்டையும் இளங்கோவடிகள் கூறியுள்ளார். கோவலனின் குலதெய்வமான மணிமேகலையே அவனைக் காப்பாற்றியதாகச் செய்தியுள்ளது. அதன்பொருட்டே கோவலன் மாதவிக்குப் பிறந்த தன்மகளுக்கு மணிமேகலை எனப் பெயரிட்டான் என்பர். மதுரையை எரிக்க கண்ணகி சென்றபொழுது பாண்டிய மன்னனின் குலதெய்வமான மதுராபதி தெய்வம் பாண்டியனின் பரம்பரை நீதிநெறி தவறாத பரம்பரை என்பதைக் கூறி, கோவலனின் இறப்பிற்கு முற்பிறவி சாபமே காரணம் எனுமிடத்தும் குலதெய்வமே பாண்டியனுக்காக வந்து வாதிட்டமை விளக்குகிறது.

மேலும் இப்பகுதியில் இன்னும் ஒரு சில பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சமயச் சிந்தனைகள் ஆராயப்படாமலிருக்கலாம், ஆயினும் காப்பியங்கள் அறங்கூறும் முகத்தான் சமயத்தைக் கையாண்டிருக்கின்றன எனும் தெளிவுக்கு வரலாம்.

முடிவுரை

சிலப்பதிகார காலத்தில் இருந்த சமயங்கள் அனைத்தும் மனிதனை மனிதனாக்க இளங்கோவடிகளால் எடுக்கப்பட்ட முயற்சியே. நற்கருத்துகளை மக்களுக்கு போதிக்க

இந்திய சமயங்கள் அனைத்தையும் துணையாகப் பயன்படுத்தியுள்ளதை என்னும்பொழுது வியப்பாக உள்ளது. சிலப்பதிகாரத்தில் பல்வேறுபட்ட சமயங்களும், சமயச் சிந்தனைகளும் பொதிந்து கிடக்கின்றன. சமயச் சிந்தனைகளை மக்கள் மனத்தில் விதைக்கவே தெய்வ வழிபாட்டு முறைகளும், திருவிழாக்கள், பலிக்கடன் செலுத்துதல் போன்ற வேண்டுதல்களும் தோன்றின எனலாம். சமய சிந்தனைகளை போதிக்கும் பொழுது கூட ஆண், பெண் கதைமாந்தர்களை நிகராகவே படைத்திருக்கிறார்.

தொகுப்புரை

சிலப்பதிகாரத்தில், சமணரான இளங்கோவடிகள் காலத்தில் அனைத்து சமயங்களும் பாகுபாடின்றி தங்களது சமயக்கருத்துகளை முன்வைக்கின்றன. இதன்மூலம் இன்றைய காலம்போன்று, மாற்றுச் சமயச் சாடல்களின்றி அனைத்து சமயங்களும் இணக்கமாக இருந்தன என்பதை இளங்கோவடிகள் பாத்திரப்படைப்பின்வழி தெளியலாம். பண்டைய காலத்தில் போற்றப்பட்டுவந்த சமயங்கள், சமயக்கருத்துகள், சிறுதெய்வ, குலதெய்வ வழிபாட்டு முறை இவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் சமயச் சிந்தனைகளின்றி மனித சித்தாந்தம் உருவாகவில்லை என்பது புலனாகிறது. இத்தகு கருத்துகளையே உருவ வழிபாட்டிற்கு உட்படுத்தாமல் சித்தர்கள் குறிப்பிட்டபோது தத்துவங்களாக அறியப்பட்டன. ஆக மனித வாழ்வில் சமயச் சிந்தனைகள் இரண்டறக் கலந்தன என்பதே உண்மை. இதை கி.பி.இரண்டாம் நூற்றாண்டிலேயே வலியுத்திச் சென்றிருக்கும் தீர்க்கதரிசியான இளங்கோவடிகளைப் போற்றுவதே சிறந்தது. இன்றைய சூழலில் சமயச் சிந்தனைகள் "மனித மனங்களைப் பண்படுத்தி, பக்குவப்படுத்தி, நெறிப்படுத்தி, அறிவார்ந்த, ஒழுக்கமான சமூகக் கட்டமைப்பிற்கு வழிவகுக்கும் மிகச் சிறந்த ஊற்றுக்கோலாய்த் திகழவேண்டும்".

துணைநூற்பட்டியல்

1. இளங்கோவடிகள் சமயம் இது? - அ.ச.ஞானசம்பந்தன், கங்கை புத்தக நிலையம், சென்னை.
2. திருவருட்பா - இராமலிங்க அடிகள், சாரதா பதிப்பகம், சென்னை.
3. சிலப்பதிகாரம் - ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை, இராமையா பதிப்பகம், சென்னை.
4. சிலப்பதிகாரம் - திரு.பொ.வே.சோமசுந்தரனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், டி.டி.கே. சாலை, சென்னை.
5. சிலப்பதிகாரம் - ஞா.மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், மன்னடி, சென்னை.
6. சமணமும் தமிழும் - மயிலை.சீனி.வேங்கடசாமி, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை.

REFERENCES

1. Elangovadikal Samayam Ethu? - E.S.Gnanasambantham, Kangai Puththaga Nilaiyam, Chennai.
2. Thiruvarutpa - Ramalinga Adigal, Saratha Publishers, Chennai.
3. Silappathikaaram - N.M.Venkatasamy Nattar Urai, Ramaiya Publishers, Chennai.
4. Silappathikaaram - Thiru.Po.Ve.Somasundaranar, Saiva Siththantha Publishers, Ttk Salai, Chennai.
5. Silappathikaaram - G.Manikkavasagan, Uma Publishers, Mannadi, Chennai.
6. Samanamum Bouththamum - Mayilai.Seeni.Venkatasamy, Naam Thamizar Publishers, Chennai.